## சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு வரும் தெரிவாளர்கள் பின்வரும் சான்றிதழ்களின் முலச்சான்றிதழ்கள் அனைத்தையும் கட்டாயம் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

1. பிறந்த தேதிக்கான சான்றிதழ் (SSLC / HSC Mark Sheet).

2(அ). கல்வித் தகுதிக்கான சான்றிதழ் (14.06.2013 நாளிட்ட தேர்வாணைய அறிவிக்கையின் பத்தி 3(B)(i)-ல் உள்ளவாறு) மற்றும் அடிப்படைக் கல்வித் தகுதியான S.S.L.C அல்லது அதற்கு சமமான மதிப்பெண் பட்டியல் / சான்று.

2(ஆ). தொழில்நுட்ப கல்வித் தகுதிக்கான சான்றிதழ் (தட்டச்சர்-தமிழ் மற்றும் ஆங்கிலம்) (14.06.2013 நாளிட்ட தேர்வாணைய அறிவிக்கையின் பத்தி 3(B)(ii)-ல் உள்ளவாறு)

3. தமிழில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ் (SSLC/PUC/HSC/Degree)/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இரண்டாம் நிலை மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற்றமைக்கான சான்றிதழ்.

4. சாதிச் சான்றிதழ் - அச்சடிக்கப்பட்ட நிரந்தர அட்டையில் (பெண் விண்ணப்பதாரராக இருப்பின் அவரது தந்தையின் பெயரில் இருக்கவேண்டும்), விண்ணப்பதாரரின் நிரந்தர குடியிருப்பு எல்லைக்குட்பட்டுள்ள சார் ஆட்சியர் / உதவி ஆட்சியர் / வருவாய் கோட்ட அலுவலர் / வட்டாட்சியர் / வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த் துறை அலுவலர் (அ) தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / கூடுதல் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / மண்டல துணை வட்டாட்சியர்/ சாதிச் சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணை வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டதாக இருக்கவேண்டும்.

5. வயது விதித் தளர்வு கோரிக்கைக்கான உரிய சான்றிதழ் (14.06.2013 நாளிட்ட தேர்வாணைய அறிவிக்கை பத்தி 3அ-ல் குறிப்பிட்டுள்ளவாறு).

6. முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சான்றிதழ் (தேர்வாணையப் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் பத்தி 13 (எ)ல் குறிப்பிட்ட படிவத்தில்)

**(முன்னாள் இராணுவத்தினரின் மனைவி/மகன்/மகள் - முன்னாள் இராணுவத்தினராக கருதப்பட மாட்டார்).**

7. (அ) மாற்றுத் திறனாளி என்பதற்கான உரிய மருத்துவக்குழுவிடமிருந்து (மூன்று உறுப்பினர் அடங்கிய மருத்துவக்குழு)பெறப்பட்ட சான்றிதழ்.

மற்றும்

**(ஆ) உடல் ஊனத்தின் தன்மை, சரியான விழுக்காடு (with percentage of disability) மற்றும் அவரது உடல் ஊனம் அவருடைய பணிகளைத் திறம்படச் செய்வதில் அவருக்குத் தடையாக இருக்காது என்று கருதுவதாகவும் மருத்துவ குழுமத்தால் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். (தேர்வாணையத்தின் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளின்/பத்தி எண் 13(ஊ)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு).**

8. இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் (Last Studied Conduct Certificate).

அல்லது

இறுதியாக அஞ்சல்வழிக் கல்வி / தொலைதூரக் கல்வி பயின்றிருப்பின் அதற்கான சான்று மற்றும் அதற்கு முன் பயின்ற கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்.

9. "அ" மற்றும் "ஆ" நிலை (Group ‘A’ or ‘B’) அரசு அதிகாரியிடமிருந்து 14.06.2013 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்.

10. (அ) ஆதரவற்ற விதவை என்பதற்கான சான்று (Destitute Widow) (விளக்கம் "ஆதரவற்ற விதவை" என்பது அனைத்து வழியிலிருந்தும் கிடைக்கப் பெறும் மொத்த மாத வருமானமாக ரூ. 4000/-ஐ (ரூபாய் நான்காயிரம் மட்டும்) மிகாத தொகை பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம் குடும்ப

ஒய்வூதியம் (அ) மற்ற வருமானங்கள் (தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உட்பட) எவையேனுமிருப்பின் அவற்றையும் உள்ளடக்கியதாகும்). இத்தகைய விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அழைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்டாட்சியர் (அ) உதவி ஆட்சியர் (அ) சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று தேர்வாணைய அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

(ஆ) ஏற்கனவே விண்ணப்பத்தோடு அனுப்பிய ஆதரவற்ற விதவைச் சான்றிதழில் உள்ள குறைபாடு / குறைபாடுகளை உரிய அதிகாரியின் மூலம் திருத்தி, அத்திருத்தத்திற்கான அன்னாரது மேலொப்பம் பெற்ற மூலச் சான்றிதழ்.

11. விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டது போன்று இரண்டு கடவுச் சீட்டு அளவு (Passport Size) நிழற்படங்கள்.

12. தடையின்மைச் சான்றிதழ் (NOC) (உரிய படிவத்தில்) (தற்போது பணிபுரியும் துறைத் தலைவரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரையுடன் கூடியது) (தேவைப்படின்).

13. 10-ம் வகுப்பு தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட வேண்டும்.

**<u>PSTM CERTIFICATE</u>**

This is to certify that Thiru/Tmt……………………………. has studied SSLC during the year from …………….. to ………………… in Tamil Medium. This certificate is issued after verifying the course content/statement of marks/Transfer Certificate. The candidate has/has not obtained scholarship for having studied in Tamil Medium.

Date:

Place: Signature of the Head Master

Seal of the Institution: